மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, (அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரிப்பட்டி, பரம்பு ஆகிய இடங்களில ஏற்கனவே சத்துணவுக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) எனவே, புதிதாக சத்துணவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

*3699—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதியில் புலியூர் மற்றும் பெருமாள்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. அன்பில் பொய்யாமொழி: தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன, அவை எந்த அடிப்படையில் துவங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பலமுறை இதே மன்றத்தில் நான் பதில் அளித்து இருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம் எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அந்த ஊரில் இருக்கிற மக்கள் ஐந்து ஏக்கர் நிலமும், 10,000 ரூபாய் பணமும் தருவார்களானால், அதைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கொடுக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 174 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது